# இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் தன்மை

THE NATURE OF THE MUSLIM MARRIAGE AND DIVORCE ACT (MMDA) OF SRI LANKA

Dr. ALA. Gafoor
*Attorney at law*
aadrgaffrr@gmail.com

**Summary**

*In the past, there had been a serious of arguments put forward to bring the amendments to the Muslim Marriage and Divorce Act. One of the key debates revolved as to whether the Muslim Marriage and Divorce Law in Sri Lanka adheres to Islamic Law or Customary Law. it's essential to grasp this distinction. As such the Sri Lankan Muslim Marriage and Divorce Act functioning as both customary law and Special legislation. With a rich legal heritage obtaining in Sri Lanka. The Legal system could general been categorised in various ways of this application. For an instance, some countries follow civil law system while others having common law system. Such as the English common law based on the adversary system where as civil law system based on inquisitorial system. In general, the law is divided into substantial/ procedural/ Adjective law. with principal consideration the Muslim Marriage and Divorce Act Law is 90% of procedure/ Adjective Law. Furthermore, there's a pressing need to expand the legal framework in this domain. It's noteworthy that the lack of attention from the majority of judges and legal scholars poses a barrier to incorporating fundamental laws into relevant legislation.*

**அறிமுகம்**

கடந்த காலங்களில் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற வாதப் பிரதி வாதங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பில் புத்தி ஜீவிகளிடம் ஆலேசனைகள் பெறப்பட்டு அது சட்ட மூலமாக (Bill) தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் முன்வைக்கப்பட்ட போது பராளுமன்ற நடைமுறையில் சிக்கல்கள் ஏற்பட்டதாலும், அதனை ஆட்சேபிப்பவர்களின் எதிர்ப்பு காரணமாகவும் இச் சட்ட மூலமானது சட்டமாக ஆக்கப்படாது பாராளுமன்றத்தில் தேக்க நிலையில் உள்ளது என்பதை முதற்கண் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தற்போது இலங்கையில் நடைமுறையில் உள்ள முஸலிம் விவாக விவாகரத்துச் சட்டம் ஒரு இஸ்லாமிய ஷரீஆ சட்டமா? அல்லது முழுமையான ஒரு வழக்காற்று சட்டமா? என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இலங்கையின் சட்ட முறைமையில் மூன்று வகையான வழக்காற்றுச் சட்டங்கள் தற்போது நடைமுறையில் இருந்து வருகின்றன. இவை நீதிமன்றத்தின் நீதி முறைத்தத்துவங்களினால் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டும் இருக்கின்றன. அவை தேசவழமைச் சட்டம், கண்டியர் சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டம் என்பனவாகும். இவற்றில் மிகவும் முக்கியமான ஒரு வழக்காற்றுச் சட்டமாக முஸ்லிம் சட்டம் காணப்படுகிறது. இதில் ஒரு அங்கமாக முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் அமைந்துள்ளது. பொதுவாக முஸ்லிம் சட்டமானது. தூய ஷரீஆ சட்டத்தின் ஒரு சில சட்டக் கோட்பாடுகளையும், இந் நாட்டில் முஸ்லிம்கள் பாரம்பரியமாக பின்பற்றி வருகின்ற நன்கு வேரூன்றிய வழக்காற்று சட்டங்களின் ஒரு பகுதியையும் சேர்ந்த கலவைதான் முஸ்லிம் சட்டம் என இன்று எம்மால் அழைக்கப்படுகின்றது. இதனை உயர் நீதிமன்ற நீதியரசர் ஜமில் அவர்கள் கௌஸ் எதிர் கௌஸ் என்ற வழக்குத் தீர்ப்பில் சுட்டிக்காட்டி உள்ளார். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் மீது பிரயோகிக்கப்படுகின்ற இந்த ஆள்சார் சட்டத்தினை ஆரம்பத்தில் ‘‘முஹம்மதியன் சட்டம்’’ என அழைக்கப்பட்டு அச் செற் பிரயோகம் பொறுத்தமற்றது என சுட்டிக் காட்டப்பட்டதன் பிரகாரம் பின்னறான காலங்களில் அது ‘‘முஸ்லிம் சட்டம்’’ என அழைக்கப்படலாயிற்று. முஸ்லிம் சட்டமானது ஒரு விசேட சட்டம் எனவும் அழைக்கப்படுகின்றது. இது ஆள்சார் தன்மையைக் கொண்டிருப்பதனால் முஸ்லிம் ஒருவர் இந்நாட்டில் எப்பாகத்தில் வசித்துவருகினும் இடவேறுபாடு இன்றி அவருக்கு முஸ்லிம் சட்டம் பிரயோகிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில், 1774ஆம் ஆண்டு காலப்பகுதியில் ‘‘பைசென் டெவீட்டன் மூரன் ஆக்காட்டையே’’ என்ற டச்சுக் கோவையானது இலங்கையில் அப்போது வாழ்ந்திருந்த முஸ்லிம்களுக்கு ஏற்புடையதான முஸ்லிம் சட்டம் என கோவை செய்யப்பட்டு பிரயோகிக்கப்பட்டுவந்தது. இது ‘‘பத்தேவியாக் கோட்’’ எனவும் அழைக்கப்பட்டுவந்தது. இச் சட்டக் கோவையானது பத்தேவியாவில் இருந்த கவர்னர் போல்க் அவர்களின் முயற்சியினால் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் மீது பிரயோகிப்பதற்காக கொண்டுவரப்பட்ட முதலாவது ஆள்சார் சட்டமாகும்.

இதன் பின் இங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிய பிரிதானிய ஆட்சியாளர்கள் டச்சு மொழிப் புலமையின்மை மற்றும் முஸ்லிம்களுக்கான திருமணம், வலியுரிமை, விவாகரத்து, பருவ வயது தொடர்பிலான வியங்களில் சட்ட ஏற்பாடுகள் எதுவும் காணப்படவில்லை என்பதால் 1801ஆம் ஆண்டு அக்காலப் பகுதியில் இருந்த பிரதம நீதியரசர் ஜோன்ஸ்டன் என்பவர் முஹம்மதியன் கோவையை தயாரித்தார். இது தொடர்பில் சட்டவியல் அறிஞர்களின் விளக்கமாகிறது ‘‘குறித்த இச் சட்டம் ஏற்கனவே டச்சுகாரர்களால் உருவாக்கப்பட்டிருந்த முஸ்லிம் சட்டத்தின் ஆங்கில மொழி மூலமான மொழிபெயர்ப்பு மாத்திரமேயாகும்’’ எனக் குறிப்பிடுகின்றனர். எவை எவ்வாறு இருப்பினும் 1898ஆம் ஆண்டு வரையும் குறித்த இச் சட்டக் கோவை முஸ்லிம் திருமணப் பதிவு, விவாகரத்துச் சட்டத்தினால் மாற்றப்படும் வரை

நடைமுறையில் இருந்துவந்தது. பின்னர் 1927ஆம் ஆண்டு முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் கொடுவரப்பட்டது. 1937ஆம் ஆண்டு முஸ்லிம் விவாகப் பதிவுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் பின்னர் 1951ஆம் ஆண்டு இறுதியாக தற்போது நடைமுறையில் உள்ள முஸ்லிம் விவாக விவகரத்துச் சட்டம் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுவாக சட்டத்தின் செயற்பாடுகளைப் பொறுத்து அவற்றை பலவிதமாகப் பிரித்து விளங்கிக் கொள்ள முடியும். அந்தவகையில் நெப்போலியனின் கோவை பிரயோகிக்கப்பட்ட நாடுகளைக் குறிக்க “குடியியல் சட்ட நாடுகள்” எனும் செற்பிரயோகமும், அங்கில பொதுச் சட்டம் பிரயோகிக்கப்பட்ட நாடுகளைக் குறிக்க “பொதுச் சட்ட நாடுகள்” எனும் செல்லாடலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் அடிப்படைச் சட்ட முறைமைகள் ஆங்கில பொதுச் சட்டத்தைத் தளுவிய எதிரிடையே சட்ட முறைமை (Adversarial Legal Systems)யைக் கொண்ட நாடாக அமைந்துள்ளது. பொருள் அளவிலனான சட்டம் (Substantive Law) எனவும் நடைமுறைச் சட்டம் (Procedural Law) எனவும் அதன் பயன்பாட்டைப் பொறுத்து பிரித்து விளங்கிக் கொள்ளலாம். இங்கு பொருள் அளவிலான சட்டம் என்பது மக்கள் மீது உள்ள உரிமைகளையும், கடமைகளையும் மற்றும் சட்டக் கோட்பாடுகளை எடுத்து இயம்புகின்ற சட்டமாகும். ஊதாரணமாக: ஒப்பந்தச் சட்டத்தைக் குறிப்பிட முடியும். இச்சட்டத்தில் யார் ஒப்பந்தம் செய்ய தகுதியுடையவர், எவ்வாறு ஒப்பந்தம் செய்ய வேண்டும், ஒப்பந்ததின் வகைகள், ஒப்பந்தம் ஒன்றின் முரிவு மற்றும் அதன் பரிகாரங்கள் என்பவற்றை எடுத்துக் கூறுகின்ற சட்டமாகும். இவை அனைத்தும் சட்டக் கோட்பாடுகளுடன் (Principles of Law) தொடர்புடையதாகும். இதனடிப்படையில் முஸ்லிம் சட்டத்தை எடுத்து நோக்குகின்ற போது முஸ்லிம் தனியார் சட்டத்துடன் தொடர்புடைய ஷரீஆ சட்டம் மற்றும் பிக்ஹ் சார்ந்த சட்டங்கள் அணைத்தும் இச் சட்டப் பிரிவுக்கு உதாரணமாகக் கொள்ள முடியும். இவ்வடிப்படைச் சட்டங்கள் பொதுமக்கள் மீது பிரயோகிக்கப்படுகின்ற போது முரண்பாடுகள் தோற்றிவிக்கப்படுமாயின் அம் முரண்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டு இறுதி வடிவமானது உயர் நீதிமன்றத்தில் முற்த்தீர்ப்புக் கோட்பாட்டின் மூலம் தீர்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பாராளுமன்றமானது காலத்திற்கும், தேவைக்கும் ஏற்ப நியதிச் சட்ட உருவத்தில் சட்டங்களை ஆக்குகின்றது. அதன் பிரயோகத்தின் மூலமும் பொதுமக்கள் நீதியைப் பெற்றுக் கொள்கின்றனர்.

### முஸ்லிம் விவாகரத்துச் சட்டத்தின் தன்மை

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டதை பொறுத்தமட்டில் அது எவ்வாறன சட்டம் எனப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. பொதுவாக இலங்கையை பொறுத்தமட்டில் ஒருவர் குற்றம் செய்தால் அது குற்றவியல் சட்டத்தினாலும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தினாலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்றன. இங்கு குற்றவியல் சட்டமானது பொருள் அளவிலான சட்டமாகவும், குற்றவியல் நடைமுறைக் கோவையானது ஒரு நடைமுறைச்

சட்டமாகவும் காணப்படுகிறது. குற்றவியல் சட்டம் பொதுவாக என்ன வகையான குற்றங்கள் புரியப்படகின்றன என்பது பற்றி கூறுவதாகும். ஆனால் குற்றவியல் நடைமுறைச் சட்டமானது குற்றவியல் வழக்கொன்று எவ்வாறு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படல் வேண்டும் என்பது தொடர்பில் எவ்வாறு புலன் விசாரனை மேற்கொள்ளப்படல் வேண்டும், எவ்வாறு தீர்ப்பளிக்கப்படல் வேண்டும் என்பதைப் பற்றிக் கூறுவதாகும். காணி தொடர்பிலான வழக்குகள் சிவில் வழக்குகளாகக் காணப்படுகின்றன. அவ்வாறே கடன் கொடுத்தல் மற்றும் ஏனைய சிவில் உறித்துக்கள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கும், அவை தொடர்பில் வழக்குகளைத் தீர்ப்பளிப்பதற்கான சட்டமாக குடியியல் நடைமுறைக் கோவை காணப்படுகின்றது. இதனடிப்படையில் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தை நோக்குகின்ற போது இச்சட்டமானது முஸ்லிம் திருமணம் தொடர்பான சட்டக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட ஒரு நடைமுறைச் சட்டமாக இது காணப்படுகின்றது. ஆதலால் அநோகமான முஸ்லிம் சட்டக் கோட்பாடுகள் இந்த நடைமுறைச் சட்டத்தின் வாயிலாக உள்வாங்கப்படாமல் வெளியே காணப்படுகின்றன இது ஒரு பாரிய வெற்றிடமாகும். இவ்விடயத்தை விளங்கிக் கொள்ளாத ஒரு சிலர் குர்ஆன் மற்றும் சுன்னாவை அடிப்படையாகக் கொண்ட இச் சட்டத்தை மாற்றுவதாக கருதுகின்றனர். ஆனால், இங்கு மாற்றப்படுவது திருமண விவாகரத்துத் தொடர்பான நடைமுறை மாத்திரமே என்பதை விளங்கிக் கொள்ளல் வேண்டும். இவ்வாறான நடைமுறைச் சட்டங்களை அரசாங்கம் பொருத்தமற்றதாகக் கருதுகின்ற போது அதனை மாற்றியமைக்கும் நடைமுறை காணப்படுகின்றது. இதன் பொருள் அல்-குர்ஆனியச் சட்டத்தை மாற்றியதாகக் கொள்ளப்படமாட்டாது. இலங்கையின் சட்ட வரலாற்றில் பிரித்தானிய ஆட்சியில் கொண்டுவரப்பட்டு தற்போது நடைமுறையில் இருக்கும் சிவில் நடைமுறைக் கோவையானது பல தடவைகள் மாற்றப்பட்டு இருப்பதனை அவதானிக்கலாம். இதனடிப்படையில் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திற்கு வெளியே காணப்படுகின்ற பொறுத்தமான சட்டக் கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் இச்சட்டத்திற்குள் உள்வாங்கி மாற்றியமைக்கப்பட வேண்டியது காலத்தினதும், சமூகத்தினதும் தேவையாக உள்ளது.

பொதுவாக சட்டம் என்பது பொதுமக்களை கட்டுப்படுத்துகின்ற விதிகளாகும். மறுவகையில் கூறுவதாயின் சில விதிகளினால் நாம் கட்டுப்பட்டுள்ளோம் என பொதுமக்கள் கருதுவதும் சட்டத்தின் வரையறைக்குள் உள்ளடங்கும். பொதுவாக சட்டத்திற்கு ஊறுத்தம் (Sanction) காணப்படுகின்றது. அதாவது சட்டத்தை மீறுகின்ற போது அதை மீறியவருக்கு தண்டனை வழங்கப்படுகின்றது. குற்றவியல் சட்டத்தை மீறுகின்ற ஒருவருக்கு சிறை தண்டனை அல்லது தண்டப் பணம் போன்ற உறுத்தங்களும், குடியியல் சட்டத்தை மீறுகின்றவருக்கு ஆதன இழப்பு, நஸ்ட்டஈடு செலுத்துதல் போன்ற உறுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. பொதுவாக சட்டவியல் அறிஞர்களின் கருத்தின் படி வழக்காற்றுச் சட்டங்களை மீறுகின்ற போது உறுத்தங்கள் அங்கு காணப்படுவதில்லை என்பதால் அது சட்டம் எனக் கருத முடியாது. எனவேதான் பாராளுமன்றமானது இலங்கையில் காணப்படுகின்ற வழக்காற்றுச் சட்டங்களை பாராளுமன்றத்தின் சட்டவாக்கத் தத்துவத்தின் மூலம் சட்டமாகவும், சட்டக்

கோவைகளாகவும் ஆக்கி அதற்கே உரித்தானவர்கள் மீது பிரயோகிக்கப்பட்டு வருவதனைக் காணலாம். வழக்காற்றுச் சட்டங்கள் பாராளுமன்ற சட்ட நடைமுறைக்குள் கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்படுகின்ற போது அதை மீறுகின்றவர் மீது உறுத்தத்தை பிரயோகிக்க முடியும். உதாரணமாக முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் இரண்டாவது திருமணத்தை ஒருவர் மேற்கொள்ள விரும்பினால் அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நடைமுறைகளை பின்பற்றி அத்தகைய இரண்டாம் திருமணமானது திருமணப் பதிவாளரினால் பதிவு செய்யப்படல் வேண்டும். அவ்வாறு நடைமுறை பின்பற்றப்படாமல் மேற்கொள்ளப்படும் திருமணம் தொடர்பில் தண்டப்பணம் விதிக்கக்கூடிய நடைமுறை காணப்படுகின்றது.

குறிப்பிட்டுச் செல்லக்கூடிய சில அடிப்படைச் சட்டக் கோட்பாடுகள் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பிரிவு 47 காழி நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் தொடர்பில் காணப்படுகின்றது. அதாவது மஹர் அல்லது கைகூலி போன்றவற்றை மீளப் பெற்றுக் கொள்ளுதல், தாபரிப்பை பெற்றுக் கொள்ளுதல் போன்ற இன்னோரன்ன விடயங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. ஆனால் மஹர், கைகூலி, தாபரிப்பு போன்றவை எவ்வாறு துணியப்படல் வேண்டும் என்பது பற்றிய நடைமுறைகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வில்லை. எனவே இவை தொடர்பிலும் சட்டக்கோட்பாடுகள் கொண்டுவரப்பட்டு இக் குறைபாடுகள் நீக்கப்படல் வேண்டும். இது தொடர்பில் 1925 ஆண்டு உயர் நீதிமன்ற வழக்கான ரெக்ஸ் எதிர் மிஸ்கீன் உம்மா 26NLR என்ற வழக்கில் அப்போதய இலங்கையின் பிரித்தானிய பிரதம நீதியரசர் குறிப்பிடுகையில் "உலகத்தில் மிகவும் சிறப்பான ஒரு சட்டயியலை தன்னகத்தே கொண்டுள்ள சட்டம் இஸ்லாமிய சட்டமாகும். ஆனால் துரதிஸ்டவசமாக அதில் ஒருபகுதி மாத்திரமேதான் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது எனக் கருத்துத் தெரிவித்திருகின்றார். இவருடைய கருத்தின் அடிப்படையில் பார்க்கும் போது பிரயோகிக்கப்படுகின்ற முஸ்லிம் சட்டத்திற்கு வெளியே காணப்படுகின்ற பிரயோகிக்கத்தக்க முஸ்லிம் சட்டக் கோட்பாடுகள் உள்வாங்கப்படல் வேண்டும் எனும் கருத்தை வெளிக்காட்டியுள்ளார்.

1774ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பதேவியா கோவை அதன் பின்னர் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட 1802ஆம் ஆண்டின் முஹமதிய்யன் கோவை என்பவற்றில் காணப்படுகின்ற திருமணம் தொடர்பிலான விடயங்கள் போதியதாக அமைந்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு ஆதாரமாக 1806ஆம் ஆண்டு காலப்பகுதியில் காலி மாவட்ட நீதிபதியாக இருந்த ஆங்கிலயே நீதிபதி அவர்கள் இவ்விடயம் தொடர்பில் முஹம்மதிய்ய சட்டத்திற்கு வெளியே காணப்படுகின்ற திருமண, விவாகரத்துத் தொடர்பிலான விடயங்களை உள்வாங்கி பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என தீர்ப்பு வழங்கி இருப்பது அவதானிக்கக் கூடியதாகும். இத்தீர்ப்பின் விளைவாக 1920ஆம் ஆண்டு காலப்பகுதியில் சட்ட நிர்ணய சபையில் இச்சட்டத்தில் ஒரு சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

எனவே சட்டங்களில் காலத்திற்குக் காலம் மாற்றங்கள் கொண்டுவரப்படல் வேண்டும் என்பதில் எவ்விதமான கருத்து வேறுபாடுகளும்

இல்லை. இன்னுமொரு எடுத்துக்காட்டு கௌஸ் எதிர் கௌஸ் என்றவழக்கில் சர்வாநந்த நீதியரசர் அவர்கள் பிரயோகத்தில் உள்ள முஸ்லிம் சட்டத்திற்கு வெற்றிடம் காணப்படுகின்ற போது வெளியே காணப்படுகின்ற முஸ்லிம் சட்டக் கோட்பாடுகள் உள்வாங்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படல் வேண்டும் என தெரிவித்து அவ்வாறு அவர் தீர்ப்பும் அளித்துள்ளார். இவ்ழக்கில் 1931ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க முஸ்லிம் சொத்துரிதியற்ற வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 2, 3 என்பவற்றின் ஏற்பாடுகளின் படி முஸ்லிம் ஒருவர் எந்த மத்ஹபைத் தழுவியிருக்கின்றாரோ அந்த மத்ஹபுக்கு இணங்க அவருக்குக் கிடைக்க வேண்டிய வாரிசுச் சொத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் என ஏற்பாடு செய்யதிருக்கின்றது. ஆனால் முஸ்லிம் ஒருவர் ஒரு பிள்ளையை மகவேப்புச் செய்து வளர்ப்புப் பிள்ளையாக வளர்த்துவருகின்ற சந்தர்பத்தில் வளர்த்த பெற்றோரின் வாரிசாக குறித்த பிள்ளை வரமுடியாது என்ற இஸ்லாமிய சட்டக் கோட்பாட்டை நீதிமன்ற நீதியியல் நடவடிக்கை மூலம் ஏற்று நடைமுறைப் படுத்தி சட்ட அம்சத்தை வழங்கி இருப்பதை இங்கு அவதானிக்கலாம். மேலும் நீதிமன்றம் தீர்பளிக்கும் சந்தர்ப்பத்தில், சட்ட ஏற்பாடுகள் காணப்படாத சந்தர்ப்பத்தில் குறித்த பிணக்குத் தொடர்பில் பொதுவான சட்டக் கோட்பாடு மற்றும் நீதி ஒப்புரவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பினை அமைக்க முடியும் என தெரிவிக்கப்படுகின்ற கருத்திற்கு அமைவாக முஸ்லிம் சட்டத்தின் இலங்கையில் காணப்படுகின்ற தோற்றுவாய் அமைந்துள்ளது என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய அம்சமாகும். இதன் அடிப்படையில் முஸ்லிம் சட்டத்தில் சட்ட ஏற்பாடுகள் காணப்படாத போது இலங்கையின் பொதுச் சட்டமான ரோமன் டச்சுச் சட்டம் வெற்றிடத்தை நிரப்புகின்ற பொதுச் சட்டமாக பிரயோகிக்கப்பட்டு வருவதனை அவதானிக்கலாம். ஆனால் இந்த நிலைமை மாற்றப்பட்டு முஸ்லிம் சட்டத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்களை இஸ்லாமிய சட்டக் கோட்பாடுகள் மூலம் நீதிமன்ற முற்த்தீர்ப்புகள் மற்றும் பராளுமன்ற சட்டவாக்கத் தத்துவத்தின் மூலம் உட்புகுத்தப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது என்பது இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய விடயமாகும்.

1950ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்ட ஹமீத் எதிர் முத்தலிப் என்ற வழக்கில் முஸ்லிம்களுக்குரிய பருவ வயது அல்லது பராய வயது தொடர்பில் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம் இவ்வழக்கில் உயர் நீதிமன்றத்திற்கு ஏற்பட்டது முஸ்லிம்களுக்குரிய பருவ வயது அல்லது பராய வயது என்பவை முஸ்லிம் சட்டக் கோட்பாடுகளின் படி தெளிவாக வரையறுக்கப்பட்டு இருப்பதனை அவதாணிக்கலாம் ஆனால் இலங்கை முஸ்லிம்கள் திருமணம் தொடர்பான விடயங்களுக்கு மாத்திரம் முஸ்லிம் சட்ட பருவ வயது அல்லது பராய வயது சட்டக் கோட்பாட்டினைப் பிரயோகிக்க முடியும் எனவும் ஏனைய நடவடிக்கைகளுக்கு இலங்கையின் பொதுச் சட்டமான பருவ வயதுக் கட்டளைச் சட்டம் பிரயோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்கு புரம்பாக முஸ்லிம்களுடைய சகல நடவடிக்கைகளுக்கும் முஸ்லிம் சட்டத்தில் காணப்படுகின்ற பருவ வயது அல்லது பராய வயது நடைமுறையை பின்பற்றப்படுவதில் தவறில்லை என நீதிமன்றம் கருத்துத் தெரிவித்திருக்கின்றது. ஆனால் இச்சட்டம் அடிப்படைச் சட்டமாகக் கொண்டுவரப்படவில்லை. எனவே “இலங்கை வாழ் முஸ்லிம்கள்

அவர்களுக்கு என தனியான வயது எல்லை அவர்களின் சமயம் சார்ந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதனால் அதனை உள்வாங்குவதில் எவ்விதப்பிரச்சனையும் இல்லை'' எனவே இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையில் குறித்த வழக்கு தீர்க்கப்பட்டது. ஆனால் பின்னர் வந்த நீதித் துறை நடைமுறைகளில் இவ்வாறான நடைமுறைகள் தொடர்ந்து பின்பற்றப்படாது விடுபட்டுப் போனது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

***முடிவுரை***

எனவேதான் மேற்சொன்ன விடயங்களை அவதானிக்கின்ற போது முஸ்லிம்கள் மீது பிரயோகிக்கப்படுகின்ற முஸ்லிம் சட்டமானது ஒரு விசேட சட்டம் மாத்திரமன்றி அது ஒரு ஆள்சார் சட்டமுமாகும். இச்சட்டமானது தூய ஷரீஆ சட்டத்தில் காணப்படுகின்ற குறித்த சட்டக் கோட்பாடுகளுடன் இலங்கை முஸ்லிம்கள் அவர்களுடைய சகோதர இனங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு நீண்ட காலமாகப் பிரயேகிக்கின்ற வேரூன்றிய வழக்காருகளின் கலவை முஸ்லிம் சட்டம். முஸ்லிம் சட்டக் கோட்பாடுகள் தற்போது செயற்பாட்டில் இருந்து முஸ்லிம்களுக்கு பிரயோகித்துவருகின்ற சட்டத்திற்கு வெளியே காணப்படுவதனால் அவ்வாறான சட்டக் கோட்பாடுகள் தற்போது நடைமுறையில் இருந்துவருகின்ற முஸ்லிம் நியதிச் சட்டத்தின் மூலம் மாற்றத்தினை உள்வாங்கப்படல் வேண்டும் இதனால் நீதிமன்றங்களுக்கு நீதி வழங்குவது இலகுவாக இருக்கும். மேலும், மக்களுடைய சட்டத்தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய வாய்ப்பும் கிடைக்கும். முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் மாத்திரமல்லாமல் முஸ்லிம் சொத்துரிதியற் வாரிசுமைச் சட்டம் மற்றும் தர்ம நம்பிக்கை (வக்ஃப்) பள்ளிவாசல் தொடர்பான சட்டங்கள் என்பவை பெறும்பாலும் நடைமுறைச் சட்டங்களாக உள்ளன. காலத்தின் தேவைக்காக இச்சட்டங்கள் மாற்றயமைக்கப்பட வேண்டும் என்பதுடன் இச்சட்டங்களின் பரப்பெல்லையை விரிவுபடுத்துவதற்காக இவை தொடர்பான சட்டக் கோட்பாடுகள் உள்வாங்கப்படல் வேண்டும். உயர் நீதிமன்ற தீர்ப்பான துல்பா எதிர் மாவட்ட அபிவருத்தி சபை என்ற வழக்குத் தீர்ப்பில் உயர் நீதிமன்ற நீதியரசர் அப்ரஹாம் அவர்களின் கருத்தின் படி சட்டக் கோட்பாடுகள் என்பவை மக்களுடைய உரிமைகள், கடமைகள் தொடர்பானவை அவை பொருள் அளவினதான சட்டமாகக் காணப்படுகின்றன. இதனை நடைமுறைச் சட்டமான எனும் சட்ட வாகனத்தின் மூலம் நீதிமன்றத்திற்கு ஏற்றிச் செல்ல வேண்டும். பொதுமக்களுக்கு நீதியை வழங்குவதற்கு இதனை ஏற்றிச் செல்கின்ற நடைமுறைச் சட்டமான வாகனமானது நல்ல நிலையில் இருக்கின்றவிடத்து மாத்திரமே பொதுக்களுக்கு நீதி வழங்கப்பட முடியும். அவ்வாறு அல்லாத போது பொதுமக்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றது. இந்தக் கருத்துடன் முஸ்லிம் விவாக விவாகரதுச் சட்டத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது MMDA என்பது சட்ட வாகனமாகும். இவ்வாகமானது தற்காலத்தில் பயன்படுத்தக் கூடிய நிலையில் இல்லை எனவே முழுமையாக அவ்வாகனம் சீர் செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு நீதியை ஏற்றிச் செல்விகின்ற வாகனமாக மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது.